தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும்!

ஜனநாயகத்தைப் பாதுகாக்க தி.மு.க. துணை நிற்கும்!

தேர்தல் ஆணைய கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்த பின் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் பேட்டி!

சென்னை, அக்.24-

SSR தொடர்பான தேர்தல் ஆணைய கூட்டத்தில் கலந்து கொண்டு வெளிநடப்பு செய்த பின் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் செய்தியாளர்கள் சந்திப்பில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க தி.மு.க. துணை நிற்கும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தமான் அளித்த பேட்டி வருமாறு:-



திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பில் முன்வைக்கப்பட வேண்டிய கருத்துக்கள், மக்களின் சார்பாக மக்களுக்கான தேவைகள் என்ன என்பதை முன்னிறுத்தி நாங்கள் எங்களுடைய கருத்துக்களை அங்கே தெரிவித்துவிட்டு வெளிநடப்பு செய்திருக்கிறோம். கூட்டத்தில் நாங்கள் முழுமையாக பங்கேற்கவில்லை. கூட்டம் தொடக்கத்திலேயே நாங்கள் எங்களுடைய கருத்துக்களை முன் வைத்து வெளியேறி இருக்கிறோம்.

அதில் மிக முக்கியமான கருத்துக்கள் என்னவென்றால், எஸ்ஐஆர் நடைமுறையில் ஏற்பட்டிருக்கக்கூடிய பல குளறுபடிகளை எப்படி சரி செய்யப் போறீங்க? எப்போது சரி செய்யப் போறீங்க.? என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரதான கேள்வி.

74 இலட்சம் வாக்காளர்கள் நீக்கம்!

கடந்த முறை திருத்தப்பட்ட எஸ்ஐஆரில் இறுதி வாக்காளர் பட்டியலில் 74 லட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்கள் நீக்கப்பட்டிருக்கிறாங்க. அந்த நீக்கப்பட்ட வர்களை மீண்டும் சேர்க்கப்படுவதற்கான என்ன நடவடிக்கையை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் கேட்டிருக்கிறோம். நீக்கப்பட்டவங்கல் லாம் என்ன, நாடு கடத்தப்பட்டுட்டாங்களா? இந்தியாவிலேயே இல்லையா? அவங்க தமிழ் நாட்டில் வசிக்கலையா? அப்ப அவங்க எங்க இருக்கிறாங்க? இந்தக் கேள்விக் கெல்லாம் தேர்தல் ஆணையம் பதில் சொல்லவே இல்லை.

இப்ப எஸ்ஐஆர் என்ற ஒரு நடைமுறையை கடைப்பிடித்தாங்க. இப்ப எஸ் எஸ்ஆர், ஸ்பெஷல் சம்மரி ரிவிஷன். இது ஆண்டுதோறும் வந்து ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாக வைத்து ஒவ்வொரு வருடமும் நடத்தக்கூடிய ஒரு எலக்ட்ரோல் ரிவிஷன்தான். ஆனா இதை வந்து ஸ்பெஷல் சம்மரி ரிவிஷன் ஒரு பேர் போட்டு இதை இன்னைக்கு நடத்துறாங்க.

நீங்க எஸ்ஐஆர் நடத்துறீங்க, எது நடத்துனாலும் வந்து பீப்பிள் பிரண்ட்லியாக இருக்கணும். எலக்ஷன் கமிஷன் வாக்காளர்களுக்கு வந்து ரொம்ப இலகுவா இருக்கணும். வாக்காளர்கள் தங்களுடைய பெயரை பதிவு செய்துறதுக்கான ஒரு வசதியை மேற்கொள்ளணும். அந்த மாதிரி எதுவுமே இல்லை.

ஒரு பக்கம் வந்து தேர்தல் ஆணையம் வாக்காளர்கள் 100% வாக்களிக்கனும் என்று விளம்பரப்படுத்துறாங்க. அதற்கான விழிப்புணர்வை செய்றாங்க. ஆனா வாக்காளருடைய பெயரை சேர்க்கறதுக்கே பல முட்டுக்கட்டை போடும்போது. அப்ப ஜனநாயகத்தில் வாக்காளர்கள் 100% வந்து வாக்களின்னு சொல்றதுல முரண்பட்ட தன்மைதான் தேர்தல் ஆணையத்துல இருக்கு.

அது மட்டுமல்ல, இப்போது இந்திய தேர்தல் ஆணையத்தினுடைய தலைமை தேர்தல் அதிகாரியாக இருக்கக்கூடிய ஞானேஷ் குமார் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கடந்த 17ஆம் தேதி அணைக்கு திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தை கூட்டி பல தீர்மானங்களை வடித்து நாங்க வெளியிட்டுருக்கி றோம்.

ஜனாதிபதியை சந்தித்து தி.மு.க. மனு!

அதில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அந்த தீர்மானங்கள் ஒன்றுதான் வந்து ஞானேஷ் குமார் வந்து பதவி விலக வேண்டும். ஜனாதிபதியை சந்தித்து மனு கொடுக்கறதும் நாங்க தீர்மானம் நிறைவேற்றிருக்கோம்.

நாங்கள் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஒட்டிதான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இந்த சீப் எலக்ஷன் கமிஷன் ஆப் இந்தியாவை வச்சுக்கிட்டு எந்த ஒரு எக்சைஸ் செய்தாலும், எந்த வாக்காளர் பட்டியல் திருத்துகிற நடவடிக்கையை மேற்கொண்டாலும், அதில் நம்பகத் தன்மை இருக்காது. அது உண்மையான வெளிப்படைத்தன்மை இருக்காது.

அதனால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரதான கோரிக்கை என்னவென்றால், இந்த சீப் எலக்ஷன் கமிஷன் ஆப் இந்தியாவை வச்சு நீங்க செய்ற எந்த எக்சைஸும், இது வந்து யூஸ்லெஸ் தான், இது வேஸ்ட், இது கண்துடைப்புதான். ஜனநாயகத்துக்கு ஏமாத்தக்கூடிய வேலைதான்.

அதனால இந்தியாவில இருக்கக்கூடிய ஒட்டுமொத்த பிரதான எதிர்க்கட்சிகள், அரசியல் கட்சிகள் எல்லாம் வந்து இன்றைக்கு இருக்கக்கூடிய தலைமை தேர்தல் அதிகாரி மேல நம்பிக்கை இழந்து பல கருத்துக்களை, குற்றச் சாட்டுகளை முன்வைத்திருக்கிறோம்.

எனவே வந்து ஒன்றிய அரசாங்கம் இதற்கு செவிசாய்த்து, இந்திய தேர்தல் ஆணையம் வந்து இதை அவர் தானாக முன்வர வேண்டும். இல்லைன்னா சட்டத்திற்கு உட்பட்டு, கான்ஸ்டிட்யூஷனலி ரிமூவ்ட், அதை வந்து ரிமூவ் பண்ணலனா நிச்சயமாக இந்த வாக்காளர் திருத்துகிற பணி என்பது நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடைபெறாது என்பதை நாங்கள் தெளிவாக எடுத்துரைத்து நாங்கள் வெளிநடப்பு செய்திருக்கோம்.

செய்தியாளர் கேள்விக்கு பதில் :

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் அதிசயமான விஷயம் பார்த்தா, ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியுமே வெளிநடத்தி இருக்கு. இதை வந்து எப்படி பார்க்கறீங்க?

இல்ல, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிங்கறத விட வாக்காளர் பட்டியல் திருத்துகிற பணி சரியா இருக்கறதுதான் நோக்கமே தவிர, இது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, இந்தியா கூட்டணி, அந்தக் கூட்டணி லாம் ஒண்ணுமே கிடையாது. எல்லாருக்குமே தெரியும், இந்தியாவுல முதல் முதல்ல வந்து இந்த எஸ்ஐஆர்ங்கிற ஒரு சப்ஜெக்ட் வந்து பீகார்ல நடந்து கொண்டிருக்கும் போதே இந்தியாவிற்கே வந்து அலாரம் அடிச்சவர் வந்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் தான்.

அன்றைக்கு முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டை ஆட்சி செய்தாலும் கூட இந்த எஸ்ஐஆருக்காக எதிர்த்து நடைபெற்ற பீகார்ல இருக்கக் கூடிய ஒரு பேரணிக்கு வந்து போய் கலந்துகிட்ட ஒரு மாநில தலைவர் இந்தியாவுல எங்களுடைய தலைவர் தான்.

தமிழ்நாட்டில எந்த அரசியல் கட்சி தலைவரும் அந்த மாதிரி அங்க போய் பங்கு கொள்ளல. ஆனா நாங்கதான் முதல் முதல்ல, எங்க தலைவர்தான் வந்து எஸ்ஐஆர்ல இருக்கக்கூடிய குளறுபடிகள், அதனுடைய விளைவுகளைப் பற்றி முதல் முதல்ல வந்து, இன்னும் சொல்லப்போனா அரசியல் ரீதியில இல்லாம காமன் மேனுக்கும் எஜுகேட் பண்ண கட்சி திமுகதான்.

இன்னும் சொல்லப்போனா, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிர்வாகிகளுக்கு பிஎல்ஏ 2 என்று இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியுடைய பிரதிநிதிகளுக்கு ஒரு ஸ்பெஷல் கேம்ப் நடத்தி, ஏன்னா இந்த எக்சைஸ் செஞ்சாகணும்.

இது வந்து அவங்க வந்து வித்ட்ரா பண்ற வரைக்கும் நாம வந்து பைகாட் பண்ணிருக்க முடியாது. எலக்ஷன நாங்க ஃபேஸ் பண்ணக்கூடிய நேரம் போது.

அப்ப நாங்க அவங்கள எஜுகேட் பண்ணி இருக்கற சிஸ்டத்தை எப்படி பெட்டரா கொண்டு வரணும், எப்படி வந்து மேக்ஸிமம் வாக்காளர்களை வந்து இழக்கக் கூடாது என்பதெல்லாம் வந்து திமுகவினுடைய நிர்வாகிகளுக்கு பயிற்சி கொடுத்த ஒரே கட்சி இந்தியாவுல வந்து திமுக மட்டும்தான்.

எனவே ஜனநாயகத்தின்படி செய்யக்கூடிய எது ஒண்ணுத்துக்கு திமுக துணை நிற்கும்.

We are the prime opposition party in India, I can say this. Thank you.

இவ்வாறு இ.பரந்தாமன் பேட்டியளித்தார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; விரைவில் அரிசி விலை குறையும்ன்னு உணவு மந்திரி சொல்லி இருக்காரே, கேள்விப் பட்டியா?

போண்டி : **ஆமாய்யா; அவர்தான் கொஞ்ச நாளைக்கு முன் அரிசி உள்ளிட்ட பொருட்களின் விலை உயர வில்லைன்னு பேட்டியே கொடுத்தாரு இப்ப குறையும்ன்னு சொன்னதிலிருந்து விலை உயர்வை ஒத்துக்கிறார்ன்னு தானே அர்த்தம். நல்ல கவர்ன்மெண்ட்; நல்ல மந்திரி.**

புதிய தலைமைச் செயலகம் - ஆர்.டி.ஐ. பதிலால் அதிர்ச்சி!

சென்னை,அக்.24-

புதிய தலைமைச் செயலகம் கட்ட பட்டினப்பாக்கம் தேர்வானது குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் எழுப்பிய கேள்விக்கு எந்த ஆதாரமும் தங்களிடம் இல்லை என பொதுத்துறை தெரிவித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள தலைமை செயலகத்தில் இடநெருக்கடி காரணமாக, புதிய ஒருங்கிணைந்த தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்ற வளாகம் கட்டப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்திருந்தார்.

சென்னை பட்டினப்பாக்கத்தில் ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில், 15 மாடிகளுடன் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் தலைமைச் செயலகக் கட்டிடம் அமைப்பதற்காக சுமார் 26 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. இதற்காக அரசாணையும் வெளியிடப்பட்டது.

இந்த திட்டத்திற்கு அப்பகுதி மீனவர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், கடற்கரை ஒழுங்குமுறை மண்டல பகுதியில் பிரமாண்ட கட்டிடங்களை கட்டுவது இயற்கைக்கே ஆபத்தானது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், மிகப் பெரிய தலைமைச் செயலகம் அமைக்க முடிவெடுக் கப்பட்டதன் பின்னணி குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்ப் பொதுத்துறைக்கு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை ஆய்வு செய்த பொதுத்துறை, மனுதாரருக்கு எழுத்துப்பூர்வ மாகப் பதிலளித்துள்ளது. அதில், புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்காக பட்டினப்பாக்கம் பகுதி எவ்வாறு தேர்வு செய்யப்பட்டது என் பதற்கான எந்த தகவலும் பொதுத்துறையிடம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், அந்த இடத்தை முடிவு செய்வதற்கு ஏதேனும் ஆய்வுகள் நடத்தப்பட்டதா அல்லது அதற்காகப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் என்ன என்பது குறித்த ஆவணங்களும் தங்களுக்குக் கிடைக்க வில்லை என்று தெரிவித்துள்ளது.

இந்த பரிசீலனையின் போது வேறு இடங்கள் எவையேனும் பரிசீலிக்கப் பட்டதா என்பது தொடர்பான ஆவணங்களும் பொதுத் துறையிடம் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. துறை சார்ந்த ஆவணங்களே இல்லாமல் அரசாணை எவ்வாறு வெளியிடப்பட்டது என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரை: தஞ்சை கவிஞர்

தொல்காப்பியன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா!

எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் வெளியிட - கவிச்சுடர் கவிதைப்பித்தன் பெற்றுக் கொள்கிறார்!

தஞ்சை, அக்.24-

வழக்கறிஞர் சி. ஜெயசந்திரன், சி.பாலசந்திர னின் தந்தை தஞ்சை கவிஞர் தொல்காப்பியன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா இன்று (24.10.2026) தஞ்சை இராசப்பா நகர், ராஜ்பேலஸ் திருமண அரங்கில் மாலை 6 மணியளவில் இலக்கியமாமணி முனைவர் இரா. கலியபெருமாள் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் முனைவர் இரா.குணசேகரன் வரவேற் புரையாற்றுகிறார். தென்னங்குடி க.சண்முக சுந்தரம் முன்னிலை வகிக்கிறார்.

முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ். எஸ். பழநிமாணிக்கம் நூலினை வெளியிட கவிச்சுடர் கவிதைப்பித்தன் நூலினைப் பெறுகிறார்.

மேலும் இவ்விழாவில் தி.மு.க. கல்வியாளர் அணித் தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரையாற்றுகிறார்.

பேராசிரியர் ப. திருநாவுக் கரசு, கௌரா பதிப்பகத் தலைவர் கௌராராசசேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சி.செயச்சந்திரன் நன்றி கூறுகிறார். விழா ஏற்பாடுகளை தஞ்சை ஞான உதயம் பதிப்பகத்தார் செய்துள்ளனர்.

சாத்தான்குளம் அருகே வீட்டுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த அடையாளம் தெரியாத கும்பல் வெறிச்செயல்!

பெண் வெட்டிக் கொலை! கணவர், மகன் காயம், இரண்டு மகள்கள் கடத்தல்!

தூத்துக்குடி, அக்.24-

சாத்தான்குளம் அருகே முதலூரில் ஒரு வீட்டுக்குள் வெள்ளிக்கிழமை அதிகாலை, ஆயுதங்களுடன் புகுந்த அடையாளம் தெரியாத கும்பல், அங்கு உறங்கிக் கொண்டிருந்தவர்களை வீட்டிற்குள் புகுந்து சரமாரியாக வெட்டியதில் மேரி ரெஜிலா என்ற பெண் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரது கணவர் முத்து கிருஷ்ணன், மகன் பிளசெட் ராஜா ஆகியோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு மகள்கள் கடத்திச் செல்லப்பட்ட நிலையில், சில மணி நேரத்திற்கு பிறகு அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீடு புகுந்து நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை அடுத்த முதலூர் சேர்ந்தவர் முத்து கிருஷ்ணன் (50). இவரது மனைவி மேரி ரெஜிலா (39). இந்த தம்பதியினருக்கு பிளெஸ்லி (15), பிரின்ஸா பாப்பா (14) மற்றும் பிளெசெட் ராஜா (10) என மூன்று குழந்தைகள் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் தங்கள் வீட்டிற்குள் உறங்கிக் கொண்டிருந்த நிலையில், நள்ளிரவில் ஆயுதங்களுடன் புகுந்த அடையாளம் தெரியாத கும்பல், அங்கு உறங்கிக் கொண்டிருந்தவர்களை சரமாரியாக வெட்டியதில் மேரி ரெஜிலா என்ற பெண் பலியானார். அவரது கணவர் முத்துகிருஷ்ணன், மகன் பிளசெட் ராஜா ஆகியோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு மகள்கள் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து தட்டார்மடம் போலீசார் வழக்குப் பதிவு செய்து, சிறுமிகள் கடத்தப்பட்டார்களா என்பது குறித்தும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவத்தில் கடத்தப்பட்ட சிறுமிகளை மீட்கவும், கொலையாளிகளை பிடிப்பதற்கும் தனிப்படை அமைக்கப்பட்டு போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். முதற்கட்ட விசாரணையில் இது குடும்பத் தகராறு காரணமாக நடந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

இந்த நிலையில், சில மணி நேரத்திற்கு பிறகு சிறுமிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

வீடு புகுந்து நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருமதி நூர்ஜகான் பேகம்

அக்டோபர் 24 (2018)



கழகத்தின் கொள்கை முழக்கக் குரலாக - தலைவர் கலைஞர் அவர்களின் போர்ப்பரணி பாடும் பெண் சிங்கமாகத் திகழ்ந்த இவர், திருச்சி மாவட்டம் கரூரில் பிறந்து, 1972ல் கழகத்தின் தொண்டராக இணைந்து, தமிழகம் முழுவதும் சுற்றி வந்து, கழகத்தின் லட்சியங்களையும் செயல் திட்டங்களையும் பிரச்சாரம் செய்து வந்தவர்.

திண்டுக்கல் நகர 10வது வட்டக் கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, மாவட்டம் முதல் மாநிலம் வரை மகளிர் அணியில் தலைவர், செயலாளர், புரவலர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

திண்டுக்கல்லில் நகர் மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு மக்கள் பணியினைச் சீரிய முறையில் ஆற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று, சிறைச் சாலைகளுக்குச் சென்றவர். தலைவர் கலைஞர் அவர்கள், மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு "நீதிகேட்டு நெடும் பயணம்" சென்றபோது, எட்டு நாட்களும் தொடர்ந்து தலைவர் அவர்களுடன் நடந்து சென்றவர். தலைமைக் கழகத்தால் வழங்கப்படும் "கலைஞர் விருதினை" முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் பெற்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

சேலம் மேற்கு மாவட்டம்

வனவாசி பேரூர்க் கழகச் செயலாளர் சு.சுகுமார் மறைவு! கழகத்தினர் அஞ்சலி!

சேலம் , அக். 24 -

சேலம் மேற்கு மாவட்டம் நங்கவள்ளி மத்திய ஒன்றியம் வனவாசி பேரூர் கழக செயலாளர் சு.சுகுமார் (20. 10.2026) அன்று மறைவெய்தினார். அன்னாரது உடல் அவரது இல்ல முகவரியான 9/97 அட்டவணை முதலியார் தெரு, வனவாசி பேரூர், மேட்டூர் தாலுகா, சேலம் மாவட்டம் எனும் முகவரியில் வைக்கப்பட்டு கழகத் தினர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் அன்னாரது உடல் வனவாசி பேரூரில் உள்ள மின் மயானத்தில் எரியூட்டப்பட்டது.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. நாகர்கோவில் மண்டல நிர்வாகிகள்

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. நாகர்கோவில் மண்டலத்தின் (பதிவு எண். 176/KKM, பேரவை இணைப்பு எண். 438) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 21.10.2026 அன்று மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் சி.கருணாநிதி அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. அதில் மத்திய சங்க நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய சங்க நிர்வாகிகள்

தலைவர் – H.C. பால்ராஜ் D7900

துணைத் தலைவர்கள் – 1) S. ஏசுதாஸ் C3603
2) T. தங்கம் T 7973
3) M. சகாய கிறிஸ்துதாஸ் C9777

பொதுச்செயலாளர்– I. கண்ணன் D3332

தலைமை நிலையச் செயலாளர் –J.பிளாசட்டேனியல்C11874

பொருளாளர் – V. சிவகுமார் TM 3186

துணைப் பொதுச் செயலாளர்கள் –
1) T. இளங்கோ C4748,2) T. பத்மநாபன் D9941,
3) K. செந்தில்குமார் C9417

அமைப்புச் செயலாளர்–R. செல்லப்பன் D3265

பிரச்சார செயலாளர்–C. டேவிட்ராஜ் C11072

துணைச் செயலாளர்கள்–1)A. நாகராஜன் D 4383,
2)V.ஜெஸ்டின் ஆண்டனிC11044,3)I. ரொனால்டு புரூஸ்லி CR 9305

இடம்:கலைஞரகம்
நாள்:23.10.2026

மு.சண்முகம், Ex.MP
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை